DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 489/2019 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 3 | Caste | : |
| Name | : ஆனந்த் | Calling | : |
| Father / Husband Name | : தனபாலன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 04th August 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் பெரியகண்ணனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்சமயம் ரேஷன் கடையில் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பாக போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர், வரைபடம் என் முன்பாக சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை. மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என எனக்குத் ஞாபகமில்லை. (**அந்த பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:38:37 +0530

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

இவ்வழக்கு எதிரியும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடத்தின் ஸ்தல அமைப்பு குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மணல் திருட்டு சம்பந்தமாகத் தான் 24.07.2018ம் தேதி 17.45 மணிக்கு காளையார்கோவில் காவல் நிலைய ஆய்வாளர் சம்பவத்தை இடத்தைப் பார்வையிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. நான் மேற்படி தேதி, நேரத்தில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் எதிரி எனது ஊர்க்காரர் என்பதால் அவரிடமிருந்து ஏதோ வகையில் அபலாபம் பெற வேண்டி போலீசார் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:- இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:38:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.